# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, விஜய குமாரதுங்க ஞாபகார்த்த மன்றச் சட்டம்

---

*(1998, யூன் மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1998, யூன் மாதம் 12 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 11.50** **தபாற் செலவு : ரூபா 3.75**

# 1998 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, விஜய குமாரதுங்க ஞாபகார்த்த மன்றச் சட்டம்

[1998 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. – ஓ 7/97

**விஜய குமாரதுங்க ஞாபகார்த்த மன்றம் என அழைக்கப் படும் மன்றமொன்றைத் தாபிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற் கும் அதன் குறிக்கோள்களையும் தத்துவங்களையும் குறித்துரைப்பதற்கும் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

1. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க விஜய குமாரதுங்க ஞாபகார்த்த மன்றச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

## பாகம் I

### விஜய குமாரதுங்க ஞாபகார்த்த மன்றத்தைத் தாபித்தல்

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த மன்றத்தைத் தாபித்தல்.

2. (1) காலஞ்சென்ற திரு. விஜய குமாரதுங்கவின் ஞாபகத்தை நினைவு பெறச் செய்வதற்கு "விஜய குமாரதுங்க ஞாபகார்த்த மன்றம்" என அழைக்கப்படவேண்டியதான மன்றமொன்று தாபிக்கப்படவேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(2) மன்றம், (1) ஆம் உட்பிரிவால் அதற்குக் குறித்தொதுக்கப் பட்ட பெயரால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய பெயரால் அது வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

மன்றத்தின் முகாமைச்சபை உறுப்பினர்கள்.

3. (1) மன்றமானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட முகாமைச்சபையொன்றினால் நிர்வகிக்கப்படவேண்டும். (இது இச்சட்டத்தில் இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) :–

(அ) குடியரசின் சனாதிபதி ;

(ஆ) பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ;

(இ) உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் ;

(ஈ) கணக்காய்வாளர் தலைமை அதிபதி ;

(உ) திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, அவரது சீவியகாலத்தின்போது ; அதன்பின்னர், காலஞ்சென்ற திரு. விஜய குமாரதுங்கவின் உயிர் வாழும் முதிய வாரிசு ;

ஆயினும் எவ்வாறாயினும், திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஏதேனும் காலப்பகுதிக்கு சபையின் பதவிநிலை உறுப்பினரொருவராக இருப்பின் காலஞ்சென்ற திரு. விஜய குமாரதுங்கவின் உயிர்வாழும் முதிய வாரிசு அத்தகைய காலப்பகுதிக்கு சபையின் உறுப்பினரொருவராக சேவை புரியலாம் :

ஆயினும், மேலும், உயிர்வாழும் முதியவாரிசு சபையின் உறுப்பினரொருவராக சேவையாற்ற விரும்பாத அல்லது இயலாதபட்சத்தில், உயிர் வாழும் அடுத்த முதிய வாரிசு சபையின் உறுப்பினரொருவராக சேவையாற்றலாம் ;

(ஊ) வெளிநாட்டலுவல்கள், சட்டம், கல்வி அல்லது கலைத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட தகுதி அல்லது பிரசித்திபெற்ற ஆட்களிடையேயிருந்து திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால், அவரது சீவியகாலத்தின்போது அல்லது அதன் பின்னர் சபையினால் நியமிக்கப்பட்ட இரண்டு ஆட்கள் ;

(2) (அ) ஒராம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் அதன் சார்பில் சபைக்கு முகவரியிட்டெழுதப்பட்ட ஒரு கடிதத்தின்மூலம் பதவியிலிருந்து விலகலாம் ;

(ஆ) ஒராம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் ஏதேனும் நேரத்தில் விடயத்திற்கேற்ப திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் அல்லது சபையால் பதவியிலிருந்து அகற்றப்படலாம் ;

(இ) இவ்வுட்பிரிவின் (அ) அத்துடன் (ஆ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைய (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவிக் காலம் அவரது நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டும் ;

(ஈ) ஒராம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்டவரும் காலமுடிவில் பதவியை வறிதாக்குகின்றவருமான உறுப்பினர் ஒருவர் மறுநியமனத்திற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ) அத்துடன் (ஈ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்படும் உறுப்பினரொருவர், எந்தப் பதவியின் பயனைக் கொண்டு அவர் சபையின் உறுப்பினரொருவராக இருக்கின்றாரோ அந்தப் பதவியை வகிக்கின்றவரை பதவி வகித்தல் வேண்டும்.

(4) சனாதிபதியே சபையின் தவிசாளராதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்தில் சனாதிபதி சமுகமாயில்லாத போது அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் தங்களிடையேயிருந்து அக்கூட்டத்திற்கான தவிசாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(5) சபையின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் ஐந்து ஆதல் வேண்டும்.

(6) சபையானது (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய சபையின் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுதல் தொடர்பிலும் நடவடிக்கை முறைகளை ஒழுங்குபடுத்தலாம்.

(7) சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் சபையின் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் உளது என்ற அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உளது என்ற காரணத்தினால் செல்லுபடியற்றதாதல் ஆகாது.

(8) சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிவுக்கான எல்லா வினாக்களும் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கொன்றினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். வாக்குகள் சரிசமமாக இருக்கும்பட்சத்தில் தவிசாளர் அல்லது சபையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் வேறு எவரேனும் உறுப்பினர் அவரது சொந்த வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராதல் வேண்டும்.

மன்றத்தின் இலச்சினை

4. மன்றத்தின் இலச்சினையானது —

(அ) சபையால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம் ;

(இ) சபையின் அனுமதியுடனும் சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலுமன்றி சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. இவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக கையொப்ப மிடுதல் வேண்டும்.

மன்றத்தின் குறிக்கோள்கள்.

5. மன்றத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) இலங்கையின் சகல சமுதாயங்களுக்கிடையேயும் மக்களிடையேயும் சமாதானத்தையும் நல்லெண்ணத் தையும் புரிந்துணர்வையும் ஒத்துழைப்பையும் ஊக்குவித்தல் ;

(ஆ) பொருளாதார, சமூக ரீதியில் பாதகமான நிலைக்குட் பட்டுள்ள இளைஞர்களின் முன்னேற்றத்தை ஊக்குவித்தல் ;

(இ) கல்வி அறிவின் மேம்பாட்டை ஊக்குவித்தலும் கல்விமான்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கும் அல்லது ஒழுங்கமைப்புகளுக்கும் புலமைப் பரிசில்கள், மானியங்கள் அல்லது நிதியுதவி வழங்குதல் ;

(ஈ) பண்பாட்டு, இலக்கிய, அறஞ்சார் நடவடிக்கைகளை ஊக்குவித்தலும் உற்சாகப்படுத்துதலும் ;

(உ) இளைஞர்களுக்கு, அவர்களது அறிவை வளர்த்தல், தொழில் பெறுவதை அவர்களுக்கு இயலச் செய்தல் ஆகிய நோக்கத்துடன் பகிரங்க விரிவுரைகள், கருத்தரங்குகள், ஆய்வுக்களங்கள், மாநாடுகள், விவாதங்கள், குறுகிய தவணை கல்விப் பயிற்சி நெறிகள் என்பனவற்றை ஒழுங்குசெய்தலும் நடாத்துதலும் ;

(ஊ) தேசிய, சர்வதேச நலன் சார்ந்த விடயங்கள் மீதான வெளியீடுகளை ஊக்கப்படுத்துதலும் உற்சாகப் படுத்துதலும் ;

(எ) கல்வி நிறுவனங்கள், நூலகங்கள், நூதனசாலைகள், மருத்துவமனைகள் என்பவற்றைத் தாபித்தலும் பேணுதலும் ;

(ஏ) சர்வதேச சமாதானத்தையும் புரிந்துணர்வையும் ஊக்குவித்தல் ;

(ஐ) இலங்கையில் திரைப்படத்தின் அபிவிருத்திக்கான எல்லாவிதமான உதவிகளையும் வழங்குதல் ;

(ஒ) மேற்கூறப்பட்ட குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் அல்லது விடயங்களையும் செய்தல்.

6. (1) நிதியமானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பின்வரும் தத்துவங்களை உடையதாயிருத்தல் வேண்டும் :— மன்றத்தின் தத்துவங்கள்.

(அ) இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, நன்கொடை, மரணசாதனக் கையளிப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாகக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்கும் வைத்திருப்பதற்கும் அத்துடன் அத்தகைய ஆதனத்தைப் பிணிக்கும் ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பிற்கமைய அதனை விற்பதற்கும் ஈடுவைப்பதற்கும் குத்தகைக்கு விடுவதற்கும் கொடுத்து மாற்றுவதற்கும் அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கும் ;

ஆயினும், எவ்வாறாயினும் மன்றத்தின் அசைவுள்ள ஆதனம் எதுவும் அமைச்சரின் எழுத்திலான முன் அங்கீகாரமின்றி விற்கப்படுதலாகாது ;

(ஆ) மன்றத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்துகொள்வதற்கும் புரிவதற்கும் ;

(இ) உள்ளூர் அல்லது வெளிநாட்டு ஆட்களிடமிருந்து அல்லது ஒழுங்கமைப்புகளிடமிருந்து பணமாகவோ பொருளாகவோ கொடைகளை, மானியங்களை அல்லது நன்கொடைகளை பெறுவதற்கும் சேகரிப்பதற்கும் ;

(ஈ) செலாவணிப்பத்திரங்கள், காசோலைகள், உறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறேதேனும் கைமாற்றத்தகு ஆவணங்களைச் செய்வதற்கும், வரைவதற்கும், பொறுப்பேற்பதற்கும், தரகு கொடுப்பதற்கும் கைமாற்றுவதற்கும் வாங்கவும், விற்கவும், விநியோகிக்கவும் அத்துடன் ஏதேனும் வங்கியில் அல்லது வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு மற்றும் வைப்புக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கும், பேணுவதற்கும் ;

(உ) அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான பணத்தை பிணையுடனோ பிணையின்றியோ கடனெடுப்பதற்கும் ;

(ஊ) பிரயோகிக்கப்படாத ஏதேனும் வருமானம் உள்ளடங்கலாக, மன்றத்திற்குச் சொந்தமான எவையேனும் பணங்களை (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புகள் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எந்தப் பிணையங்களில் நம்பிக்கைப் பொறுப்புப் பணங்களை முதலீடு செய்வது சட்டமுறையானதோ அந்த ஏதேனும் பிணையங்களில் முதலீடு செய்தல் அல்லது இலங்கையில் அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில் அத்தகைய ஏதேனும் பணத்தை முதலீடு செய்தல் அல்லது அத்தகைய முதலீடுகளை வேறுபடுத்துதல் அல்லது உடனடியான செலவினத்திற்குத் தேவைப்படாத அத்தகைய பணத்தின் ஏதேனும் பகுதியை ஏதேனும் வங்கியில் நிலையாக வைப்பீடு செய்தல் ;

(எ) அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவர்களான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல் ; அத்துடன்

(ஏ) மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்பிலான எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் விதிகளை ஆக்குதல்.

நிதியத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும்.

7. (1) இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கமைய சபையானது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) மன்றத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நியமனமானது ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட நியமனத்திற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறைத் திட்டத்திற்கிணங்க மன்றத்தினால் செய்யப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்திற்கும், அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, மன்றமானது கூலிகள், சம்பளம் அல்லது வேறு ஊதியம் என்பன உட்பட மன்றத்தின் அலுவலர்களதும் சேவையாளர்களதும் சேவையின் நியதிகளையும் நிபந்தனைகளையும் தீர்மானித்தல் வேண்டும்.

(4) மன்றத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் மன்றத்தின் பதவி விலகுகைத் தத்துவம் உட்பட அதன் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தோராதல் வேண்டும். சபை ஒழுக்காற்றுக் கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

(5) மன்றமானது அதன் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நன்மைக்காகச் சகாய நிதியங்களையும் செயற்றிட்டத்தையும் தாபிக்கலாம் அத்துடன் ஒழுங்குபடுத்தலாமென்பதுடன் அத்தகைய ஏதேனும் நிதியத்திற்கு அல்லது செயற்றிட்டத்துக்கு உதவுதொகைகளையும் அளிக்கலாம்.

குறித்த சில ஒப்பந்தத்தின் நோக்கத்திற்காக மன்றத்திற்கான சேவையானது அரசாங்கத்திற்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

8. குறித்தவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்குச் சேவை செய்வதாக உடன்பட்டு, அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டவரான ஆளெவரையும், மன்றம் தொழிலுக் கமர்த்தியுள்ளவிடத்து, அந்த ஆளினால் மன்றத்திற்கு ஆற்றப் படும் சேவைக்காலப்பகுதியானது அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்துக்கு ஆற்றும் சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.

9. (1) மன்றத்தின் வேண்டுகோளின்பேரில் அமைச்சரின் அமைச்சில் சேவையாற்றும் பகிரங்க சேவை அலுவலர் எவரும், பொதுநிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப் பான அமைச்சரின் அமைச்சின் செயலாளரின் ஒருப்பாட்டுடன், அமைச்சரின் அமைச்சிற்கான செயலாளரினதும் அலுவலரி னதும் சம்மதத்துடன் மன்றத்தால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு, மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு அதேபோன்ற சம்மதத்துடன் தற்காலிக மாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத் துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக் கப்படலாம்.

(2) மன்றத்தின் வேண்டுகோளின்பேரில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவரான அலுவலரொருவர் தவிர்ந்த எவரேனும் பகிரங்க சேவை அலுவலர், அவ்வலுவலரின் சம்மதத்துடனும், பொதுநிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரின் சம்மதத்துடனும் மன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலப்பகுதிக்கு, மன்றத்தின் பணியாட் டொகுதிக்கு அதேபோன்ற சம்மதத்துடன் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப் படலாம்.

(3) மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க சேவையில் உள்ள அலுவலரெவரும் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க சேவையில் உள்ள அலுவலரெவரும் நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, போக்குவரத்துச்சபைச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) சபையின் வேண்டுகோளின்மீது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் அலுவலர் அல்லது சேவையாளர் எவரும், அந்த அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும் அத்துடன் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினதும் அந்த உயர்கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரினதும் சம்மதத்துடன், சபையால் அதேபோன்ற சம்மதத்துடன் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) இப்பிரிவில் "உயர்கல்வி நிறுவனம்" அத்துடன் "பிரதான நிறைவேற்று அலுவலர்" என்னும் சொல்லமைப்புகள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும் ; அத்துடன் "பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு" என்னும் சொல்லமைப்பு 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்று பொருள்படும்.

## பாகம் II

### நிதி

**10.** (1) மன்றமானது தனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "நிதியம்" என அழைக்கவும் குறிப்பீடுசெய்யவும்படும்) மன்றத்தின் நிதியம்.

(2) பின்வருவன மன்றத்தின் நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) மன்றமானது அதன் தத்துவங்கள், பணிகள், கடமைகள் என்பவற்றைப் பிரயோகிக்கையிலும், நிறைவேற்றுகையிலும் அத்துடன் புரிகையிலும், அதனால் பெற்றுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஆ) கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது இலங்கையிலிருந்தாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயிருந்தாயினுஞ்சரி மானியக்கொடைகள் என்பன வாயிலாக மன்றத்தினால் பெற்றுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ; அத்துடன்

(இ) மன்றத்தின் பாவனைக்கென பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்குப்பண்ணப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) பின்வருவன மன்றத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) இச்சட்டத்தின்கீழ் மன்றத்தின் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகள் என்பவற்றைப் பிரயோகிக்கையில், நிறைவேற்றுகையில் அத்துடன் புரிகையில் நிதித்தாபனத்தினால் கூறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு அவசியமாகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ், அத்தகைய நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

சபை செம்மையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல்.

**11.** (1) சபையானது மன்றத்தின் வருமானம், செலவினம், சொத்துக்கள் அத்துடன் பொறுப்புக்கள் மற்றும் எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய செம்மையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) மன்றத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரை மன்றத்தின் கணக்குகளில் கணக்காய்விற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

அமைச்சர் வரிக்கொடுப்பன விலிருந்து மன்றத்திற்கு விலக்களித்தல்.

12. (1) அமைச்சர், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான ஒருப்பாட்டுடன், மன்றத்தால் இறக்குமதி செய்யப்பட்ட எவையேனும் பொருட்கள்மீது, அத்தகைய பொருட்களின் இறக்குமதி, மன்றத்தின் குறிக்கோளை முன்னெடுத்துச் செல்வதற்கு உசிதமானதெனக் கருதப்படின், ஏதேனும் சுங்கத்தீர்வையின் கொடுப்பனவிலிருந்து மன்றத்திற்கு விலக்களித்தல் வேண்டும்.

(2) மன்றம் 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் ஏதேனும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(3) மன்றத்திற்கு எவரேனும் ஆளினால் பணமாக அல்லது வேறுவகையில் செய்யப்பட்ட நன்கொடையொன்று, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்கு, அரசாங்கத்தால் தாபிக்கப்பட்ட நிதியமொன்றுக்குப் பணமாக அல்லது வேறுவகையில் செய்யப்பட்ட நன்கொடையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் III

### பொது

மன்றம் தொடர்பில் அமைச்சரின் தத்துவங்கள்.

13. அமைச்சர், மன்றத்தின் தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதல் அத்துடன் கடமைகள் புரியப்படுதல் தொடர்பில், காலத்துக்குக்காலம் சபைக்கு எழுத்தில் அத்தகைய பொதுவான பணிப்புரைகளை வழங்கலாம்.

அசைவுள்ளதும் அசைவற்றதுமான அரசகாணி மன்றத்திற்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்தல்.

14. (1) அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் மன்றத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படுகின்றவாறான, அமைச்சரின் அமைச்சுக்குரிய அத்தகைய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை மன்றத்திற்கு மாற்றலாம் என்பதுடன் அவ்வாறு மாற்றப்பட்ட ஏதேனும் ஆதனம், அத்தகைய கட்டளையின் தேதியிலிருந்து மன்றத்திற்கு உரித்தாதலும் அத்துடன் மன்றத்தின் ஆதனமாக வருதலும் வேண்டும்.

(2) ஏதேனும் அரச காணி அப்போதைக்கு அரச காணிகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, மன்றத்தின் ஏதேனும் நோக்கத்திற்காக மன்றத்தின் பயன்பாட்டிற்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்யப்படலாம் அல்லது மன்றத்திற்குப் பாராதீனப்படுத்தப்படலாம்.

(3) அரசின் அசைவுள்ள ஆதனம் எதுவும் மன்றத்தின் நோக்கத்திற்குத் தேவைப்படுத்தப்படுமிடத்து, அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம் அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் ஆட்சியுடைமையையும் பயன்பாட்டையும் மன்றத்திற்கு மாற்றலாம் ; அத்துடன் உரித்துமாக்கலாம்.

ஆயினும், எவ்வாறாயினும், அத்தகைய ஆதனத்தின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாடின்றி அசைவுள்ள அரச ஆதனம் எதனையும் பாதிக்கும் கட்டளையெதுவும் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் அமைச்சரால் ஆக்கப்படுதலாகாது.

*மன்றம் அதன் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

**15.** மன்றம், மன்றத்தின் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் ஆறுமாத காலப்பகுதியொன்று காலாவதியாகுமுன்னர் அவ்வாண்டின்போதான மன்றத்தின் செயற்பாடுகள்பற்றிய, முழு விவரத்தைக் கொடுக்கும் அறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அமைச்சர், அவ்வறிக்கை எந்த ஆண்டு தொடர்பிலானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் இறுதிக்குமுன்னர் அவ்வறிக்கையை பாராளுமன்றத்தின்முன் வைக்கச் செய்வித்தல் வேண்டும்.

*மன்றம் இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.*

**16.** மன்றம், இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

*தாபனத்தின் உறுப்பினர்களும் ஊழியர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.*

**17.** மன்றத்தின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும் அத்துடன் சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படல் வேண்டும்.

18. (1) தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது சபையின் உறுப்பினர் அல்லது மன்றத்தின் அலுவலர் அல்லது சேவையாளர் எவரினாலும் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் செயல் எதற்காகவும் அவருக்கெதிராக அமைதல் ஆகாது. இச்சட்டத்தின்கீழ் எடுக்கப்படும் வழக்குக்கான பாதுகாப்பு.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் மன்றத்தினால் அல்லது அதற்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் மன்றத்தினால் உறப்படும் செலவெதுவும் மன்றத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டும். அத்தகைய ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்ட அல்லது நிறுவனத்தால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுத் தொகைகள் அந்நிதியத்துக்கு வரவுவைக்கப்பட வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய எவரேனும் ஆளினால் இச்சட்டத்தின்கீழ் அல்லது நிறுவகத்தின் பணிப்பின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய எவரேனும் ஆளினால் உறப்படும் செலவு எதுவும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்ப்பளிப்பின் அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

19. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய சபை பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றில் எவையேனும் கருமங்களுக்காகவும் அத்துடன் அவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றில் எவையேனும் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :— விதிகள்.

(அ) மன்றத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் ஊதியம் உட்பட சேவை நியதி, நிபந்தனைகள் ;

(ஆ) மன்றத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் ஆட் சேர்க்கும் செயற்திட்டம் அத்துடன் நியமனம் செய்வதற்கான நடவடிக்கைமுறை ;

(இ) மன்றத்தின் ஆண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் அத்துடன் செயற்றிட்டங்கள், வருடாந்த வரவுசெலவுத்திட்டம், அறிக்கை மற்றும் கணக்குகள் அத்துடன் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்றிட்டங்களும், வருடாந்த வரவுசெலவுத் திட்டம், அறிக்கை மற்றும் கணக்குகள் தயாரிக்கப்படும் முறை ; அத்துடன்

(ஈ) விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய வேறு கருமங்கள் அல்லது எவ்வேறு கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ, அவ்வேறு கருமங்கள்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**20.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

**21.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி "அமைச்சர்" என்னும் சொல்லமைப்பு கலாசார அலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்று பொருள்படும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.